திரு. ச. சங்குமுத்து தேவர்: இம்மாதிரி மின் திட்டங்களுக்காக நீர்த்தேக்கங்கள் கட்டப்படுகிறபோது, அதனுல் ஏற்கனவே பாசனம் பெற்று வந்த ஆயக்கட்டுகளுக்குப் பாதகம் இல்லாமல் இருக்குமா என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே பாசனத்திற்கு உறுதி செய்யப்பட்டிருக்குமானல் பாசனத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப் படும்.

Raising of apple trees.

*101 Q.—THIRU V. M. ABDUL JABBAR: Will the Hon the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Government have investigated the possibilities of growing apple trees in and around Nilgiris and Kodaikanal hill areas; and

(b) if so, the results thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, from the answer placed on the table, I am able to find that certain varieties are grown in Kodaikanal and the Nilgiris. May I know whether the Government will take steps to popularise one or two varieties which are mentioned in the written answer?

MR. DEPUTY SPEAKER: Name the varieties, please.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I do not remember them.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: These are not grown there in large quantities. The matter is still in the experimental

@ 146-149-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

stage. It is only in Himachal Pradesh, apple is grown in large quantities. In both the Nilgiris and Kodaikanal, as stated in the written answer, the climate is not cool enough even in winter.

புதிய ரக காரட் பயிரிடல்

* 102 **வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரிப் பகுதியில் "ஜிரேனு" என்ற காரட் ரகத்தை பயிரிட உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) இந்த காரட் வகைகளின் விதைகள் வருடந்தோறும் இறக்குமதி செய்யப்பட்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தற்போது எவ்வளவு ஏக்கரா பரப்பளவில் இந்த காரட் வளர்க்கப்படுகிறது, ஆண்டொன்றுக்கு உற்பத்தியாவது எவ்வளவு என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : 1973-74 ஆம் ஆண்டுகளில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 400 ஏக்கராக்களுக்குப் போதிய 500 கிலோ விதைகள் கொடுக்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்திலேயே இந்த விதைகளை உற்பத்தி செய்ய முடியுமா என்பது இன்னமும் சோதனையில்தான் இருக்கிறது.

சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம்

* 103. **வின—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவியுடன் அமல் நடத்தப்படும் சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம் நமது மாநிலத்தில் எங்கெங்கு நடத்தப்படுகின்றது ?

(இ) அதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு யாது ?